
# ‘மிசா’ அ.மாரியப்பன் ‘கழகம் கண்ட உன்னத தொண்டர்!’

## உடன்பிறப்பே... 74

நீரை.மகேந்திரன்

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த ‘மிசா’ அ.மாரியப்பன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

ஓவியம் : ரவி பேலட்



*1958-ஆம் ஆண்டு, சேலம் மாவட்டக் கழகத்தின் மூன்றாவது மாநாடு, முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையேற்க நடைபெற்றது. அந்த மாநாட்டுக்கு தமிழ்நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மூத்த முன்னோடிகள் வருகை தந்திருந்தனர். அவர்களை மாவட்டக் கழகத்தினர் வரவேற்று சிறப்பு செய்தனர். அவர்களில் ஒருவராக ஓடியாடி வேலை செய்துகொண்டிருந்தார் ஒரு தொண்டர். அவர்தான் பின்னாட்களில் சேலம் நகரச் செயலாளராகப் பொறுப்பு வகித்த அ.மாரியப்பன். அவர் பெயரிலேயே சேலத்தில் காங்கிரஸ் பிரமுகர் இருந்ததால், மிசா காலத்துக்கு முன் பெயர் குழப்பம் இருந்தது. ஆனால், மிசா நெருக்கடி காலத்தில் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்ட கழகத்தின் மாரியப்பன், 18 மாத சிறைவாசத்துக்குப் பின் விடுதலையானபோது, ‘மிசா’ மாரியப்பனாக அறியப்படலானார்.*

*சேலம் மாவட்டத்தில், தி.மு.க.வை வளர்த்தெடுத்த தளகர்த்தர்களுள் ஒருவராகவும் விளங்கியவர் ‘மிசா’ மாரியப்பன். பகுத்தறிவு, சுயமரியாதைச் சிந்தனைகளுடன் திராவிடர் கழக ஈர்ப்புடன் செயல்படத் தொடங்கியவர், அண்ணாவின் அன்புத் தம்பியாக கழகம் தொடங்கியபோதே, கழக உறுப்பினராகத் தன்னை இணைத்துக் கொண்டார். கலைஞரிடம் அன்பு பாராட்டிய கொள்கை ‘உடன்பிறப்பு’.*

*சேலத்தில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டம் ஒன்றில், மிசா மாரியப்பனைப் புகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர், “மாரியப்பனைப் போன்ற தொண்டர்கள் இருக்கும் வரை தி.மு.கழகத்தை இந்த மண்ணில் இருந்து, யாரும் அழிக்க முடியாது” என உணர்ச்சி பொங்க பேசி, அவருக்குத் தங்க மோதிரத்தையும் அணிவித்தார். அந்தக் காட்சியை சேலம் மாவட்டக் கழ்கத்தினர் இன்றும் மறந்திருக்க வாய்ப்பில்லை.*

### குடும்பமும் கழகமும்

*1927-ஆம் ஆண்டு, சேலம், கிச்சிப்பாளையம் பகுதியில் அய்யண்ணன் - சிவபாக்கியத்தம்மாள் ஆகியோருக்கு மூத்த மகனாகப் பிறந்தவர் மாரியப்பன். பள்ளிக்குச் சென்ற காலங்களில், இந்தி எதிர்ப்புப் போராட்டங்களும், திராவிடர் கழகப் பொதுக்கூட்டங்களும் வீதிக்கு வீதி நடந்த காலம். அந்தக் களங்களே அவர் பொதுவாழ்க்கைக்கு வந்த காலம்.*

*அப்போது, சேலம் நகராட்சியை ஒட்டிய பகுதியாக இருந்த கிச்சிப்பாளையத்தில் கிளைக் கழகத்தை உருவாக்கி, அங்கு முதன்முதலில் கழகக் கொடியேற்றியவர் மாரியப்பன். குடும்பத்தில், அவருக்குப்பின் ஆறு பேர் உடன்பிறந்தோர். 17- வது வயதில் தந்தையை இழந்த மாரியப்பன், குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டே, கழக உணர்விலும் உறுதியுடன் நின்றவர்.*

*காங்கிரஸ் செல்வாக்கு செலுத்திய ஊரில், கழகக் கொடி ஏற்றியதுடன், எதையும் எதிர்கொள்ளும் துணிச்சலும் மாரியப்பனிடம் இருந்தது. அதுதான் பின்னாட்களில் அவர் சேலம் நகரச் செயலாளராக இருந்தபோதும் தொடர்ந்தது.*

*கழகத்தினருக்கு ஏதாவது பாதிப்பு, எங்காவது பிரச்சினை என்றால், கட்டிய வேட்டியுடன் மாரியப்பன் முதல் ஆளாக நிற்பார். அப்படியான கழக வார்ப்பு ‘மிசா’ மாரியப்பன். அந்த ஈடுபாடுதான், 1963-ஆம் ஆண்டு சேலம் நகர மன்றத்தின் உறுப்பினராகக் கொண்டு வந்தது. தொடர்ச்சியாக, 5 முறை நகராட்சி உறுப்பினராக மக்களிடம் நம்பிக்கையைப் பெற வைத்தது. அந்த ஈடுபாடுதான் கட்சியின் அமைப்புத் தேர்தல்களில், நகரச் செயலாளராக 1960-ஆம் ஆண்டு தேர்வு பெற வைத்தது.*

### கைது - சிறைப் படலங்கள்

*1963-ஆம் ஆண்டு, மும்முனைப் போராட்டத்தின்போது, போராட்டத்தில் கலந்து கொள்பவர்கள் பட்டியலில், அவர் பெயர் இருந்தது. போராட்டம் நடைபெறும் அதே தேதியில் அவர் சகோதரரின் திருமணம். திருமணத்தில் கலந்துகொள்வதை விடவும், கழகப் போராட்டக் களமே முன்னுரிமை எனச் சென்று சிறைப்பட்டவர்.*

*‘மிசா’ சிறைவாசத்தின்போது, சேலம் சிறையில் ஓராண்டு காலத்துக்கு மேல் அடைக்கப்பட்டிருந்தார். அப்போது, அவருடைய மனைவி கமலாம்மாள் இயற்கை எய்தினார். அதற்காக பரோலில் வெளியே வந்த அவர், மனைவிக்கு இறுதிச் சடங்குகளைச் செய்து விட்டு, மீண்டும் சிறைக்குச் சென்றார். இப்படி அவரது சிறை வாழ்க்கை அனுபவங்கள், பல பாடங்களைக் கொண்டதாக உள்ளது.*

*1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டங்களிலும் தீவிரமாக ஈடுபட்டவர் மாரியப்பன். அப்போதும் பல நாட்கள் சிறைவாசம் அனுபவித்தவர்.*

### இளையவர்களிடம் இணக்கம்

*1960-ஆம் ஆண்டிலிருந்து சேலம் நகரச் செயலாளர் என்பதால், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என எல்லோரிடமும் நெருக்கமான அரசியல் செய்தவர் மாரியப்பன். சேலம் சித்தையன் என முன்னோடிகளிடம் சேர்ந்து அரசியல் பணியாற்றிய மாரியப்பன், அவருக்குப் பின், தனக்கு இளையவரான வீரபாண்டி ஆறுமுகம் மாவட்டச் செயலாளராகப் பொறுப்பு வகித்தபோதும், நகரக் கழகத்தில் இணக்கமாகப் பயணித்தவர். நகரக் கழகச் செயலாளராக 20 ஆண்டு காலம் பொறுப்பு வகித்தார்.*

*1972-ஆம் ஆண்டு கழகம் பிளவுபட்ட பொழுது, கட்சி மாற வேண்டும் என மிகப் பெரிய அழுத்தத்தை சந்தித்தார். அண்ணாவுக்குப் பின் கலைஞர் என்பதில் அழுத்தமாக இருந்தவர், மாரியப்பன். அதே அழுத்தத்தை ‘மிசா’ சிறையின்போதும் சந்தித்ததாக அவர் மேடைகளில் குறிப்பிட்டுள்ளார். கலைஞர் மீது குற்றம் சுமத்திவிட்டு, விடுதலையாகலாம் என அவருக்குச் சொன்னபோது, அதை மறுத்ததுடன், ‘அப்படியான விடுதலை தேவையில்லை’ என 15 மாதங்களுக்கு மேல் சிறையில் இருந்தார்.*

### கணையாழியும் பாராட்டும்

*மாவட்டக் கழகச் செயலாளர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள், பொய் வழக்கில் சிறையில் அடைக்கப்பட்ட நேரம், அதைக் கண்டித்து மிகப் பெரிய பொதுக்கூட்டத்தை சேலத்தில் நடத்திக் காட்டினார் மாரியப்பன். அந்தக் கூட்டத்துக்காக அவர் காட்டிய ஈடுபாட்டில், கலைஞர் நெகிழ்ச்சி அடைந்திருந்தார்.*

*சேலம், போஸ் மைதானத்தில் கடல் அலைபோல திரண்டிருந்த தொண்டர் கூட்டத்தில், மாரியப்பனைப் புகழ்ந்த கலைஞர், அவருக்கு மோதிரம் அணிவித்துப் பாராட்டினார். அதேபோன்ற அனுபவம்-கணையாழியை, அறிஞர் அண்ணாவிடமும் பெற்றவர் மாரியப்பன்.*

*5 முறை சேலம் நகராட்சி உறுப்பினராகவும். 20 ஆண்டுகள் நகரச் செயலாளராகவும் பணியாற்றிய மாரியப்பன், சேலம் நகர வரிக்குழுத் தலைவர், சேலம் கூட்டுறவு நகர வங்கித் தலைவரென, தான் பொறுப்பு வகித்த எல்லா பதவிகளிலும் கழக அர்ப்பணிப்புடன் இருந்தார்.*

*சேலம் நகர சபையின் வேலைவாய்ப்புக் கமிட்டியின் குழுத் தலைவராக இருந்தபோது, சமுதாய வேறுபாடுகள் இல்லாமல் நூற்றுக் கணக்கில் தகுதியான ஆசிரியர்களை வேலைக்கு நியமனம் செய்தவர் என்கிற பெருமை இன்றளவும் பேசப்படுகிறது. 1980-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை, கலைஞர் அளித்தபோது, அதை அன்புடன் மறுத்து, எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் கலைஞரைச் சந்திக்கும் உரிமை கொண்டவராக இருந்தார்.*

**மிசா மாரியப்பன். கழகம் தனக்கென்ன செய்தது என்று எண்ணிடாமல் வாழ்ந்தவர், கழகத்தினர் இதயங்களில் என்றும் நிலைத்திருப்பார்.**

*சேலம், ஜங்ஷன் ரயில் நிலையத்தில் எப்போதெல்லாம் தலைவர் கலைஞர் வந்து இறங்கினாலும், ‘மாரியப்பா’ என்று குரலோசைக் கேட்டவுடன் ஒரு சிறு துரும்பும் தலைவர் மேல் படாத வண்ணம், மக்கள் கூட்டத்தில் இருந்து அவரைப் பாதுகாப்பாக அழைத்து வந்து சேர்க்கும் கடமை கொண்ட அந்த உண்மைத் தொண்டர், 2021-ஆம் ஆண்டு அவரது 93-வது வயதில், வயதுமூப்பு காரணமாக இயற்கை எய்தினார்.*

*1949 முதல் 1967 வரை 1972 முதல் 2021 வரை என பல்வேறு அரசியல் சூழலிலும் கழகத்திற்காக உழைத்து, மறைந்த மாமனிதர் மிசா மாரியப்பன். கழகம் தனக்கென்ன செய்தது என்று எண்ணிடாமல் வாழ்ந்தவர், கழகத்தினர் இதயங்களில் என்றும் நிலைத்திருப்பார்.*

**...துடிக்கும்**

## துருவ் ரத்தி விமர்சனப் பார்வை!




பா.ஜ.க. மற்றும் வலதுசாரி எதிர்ப்பில், தீவிரமாக இயங்கி வருபவர் அரசியல் விமர்சகர் துருவ் ரத்தி. வெளிநாட்டில் வாழ்ந்தாலும், இந்தியாவின் அரசியல் சூழலை நுணுக்கமாகத் தனது எக்ஸ் தளப் பதிவுகளில் பதிவிட்டு வருவது, ஆளும் பா.ஜ.க. அரசுக்கு நெருக்கடி அளிப்பவை. @dhruv_rathee என்கிற பெயரில், உள்ள எக்ஸ் தளத்தில் அவரது அரசியல் பதிவுகள் அல்லாமல் @dhruvrahtee, என்கிற கணக்கில், இந்தியாவில் முஸ்லிம்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பெண்கள் மீதான பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ் குண்டர்கள் தாக்குதல்களைத் தொடர்ச்சியாகக் கவனப்படுத்தி வருகிறார்.

செப்டம்பர் 2 - ஆம் தேதி அவர் வெளியிட்டுள்ள பதிவில், சென்னையில் ஃபார்முலா - 4 கார் ரேஸ் வீடியோவைப் பகிர்ந்து, தமிழ்நாட்டில், சென்னையில் கார் ரேஸ் தலைப்புச் செய்தியான நாட்களில், பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள், பாலியல் வன்முறைகள் தொடர்ச்சியாக, தலைப்புச் செய்திகளாக உள்ளன என்று கூறியுள்ளதுடன், உங்கள் தலைவர்களைப் புத்திசாலித்தனமாகத் தேர்வு செய்யுங்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கார் பந்தயத்தை விமர்சனம் செய்பவர்கள், அதன் எதிர்காலப் போக்குகளைக் கவனிக்கத் தவறுகின்றனர். அதேநேரத்தில், நிகழ்காலத்தில் மறைக்கப்படும் உண்மைகளையும் வெட்ட வெளிச்சமாகப் பேச வேண்டும். அதைப் பேசி இருக்கிறார் துருவ் ரத்தி.

## ஃப்ளாஷ்பேக்



கு.வெள்ளைச்சாமி



**வாழ்த்துகளைத் தேக்கி வைத்த படம்!**

1989-ஆம் ஆண்டு, மார்ச் 1-ஆம் தேதி, அன்று அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் பிறந்த நாளின்போது, அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்க, ‘கோபாலபுரம் இல்லம்’ சென்றேன். வாழ்த்துச் சொல்ல, கழகத்தினர் கூட்டம் திரண்டு நின்றபோதிலும், நான் சால்வை அணிவித்து வாழ்த்தியபோது, என்னை நலம் விசாரித்து அனுப்பினார். 35 ஆண்டுகளைக் கடந்த நினைவுகளைப் பேசும் படம் இது.

**- கு.வெள்ளைச்சாமி, குறும்பட இயக்குநர், மடிப்பாக்கம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


**அரசியல் சட்டம் முதல் திருத்தம்!**

1950-ஆம் ஆண்டு ஜூலை ஆகஸ்ட், செப்டம்பர் மாத ‘திராவிட நாடு’ இதழ்களில் வகுப்புவாரி உரிமையின் அவசியத்தை வலியுறுத்தி, தொடர்ச்சியாக கட்டுரைகள் எழுதினார், பேரறிஞர் அண்ணா. அதேபோல, ‘விடுதலை’ ஏட்டிலும் வகுப்பு வாரி உரிமைக்கான போராட்டங்கள், கண்டனக் கூட்டங்கள் தொடர்பாக, செய்திகள் வெளியாகின. எப்பாடுபட்டாவது வகுப்புவாரி உரிமையை நிலைநாட்டியே ஆகவேண்டும் என்பதில், தீவிரமாக இயங்கியதன் விளைவாக, இந்திய அரசியல் சட்டத்தில் முதல்முறையாக வகுப்புரிமைக்காக திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

593

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131